**Starting time 11.23 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.198/2014**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 28.07.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜசேகரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> 30.08.2010 தேதியன்று எனது தகப்பனார் எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததாகக் கூறி வா.சா.ஆ.27, 28-ன் அசல் ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மேற்படி இருப்பத்திரங்களும் என்னிடம் இருந்ததா என்றால், இல்லை, வேறுவழக்கில் தாக்கல் செய்திருந்தேன். 17.09.2019 தேதியன்று என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை தாக்கல் செய்த சமயத்தில் இருப்பத்திரங்களும் என்னிடம் இருந்ததா என்றால், இருந்தது.

2. வா.சா.ஆ.29-ல் தாக்கல் செய்துள்ள பட்டாக்களை 2015-ம் ஆண்டுக்குள்ளாக நான் வாங்கிட்டேன் என்றால், ஆமாம். 2019-ம் ஆண்டில் நான் என்னுடைய சாட்சியத்தை தாக்கல் செய்த சமயத்தில் வா.சா.ஆ.29-ஐ தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். 2107 பட்டா எண்ணுக்குண்டான ஆவணத்தையும் 2010-ம் ஆண்டில் நான் என்னுடைய சாட்சியத்துடன் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம். வா.சா.ஆ.31-ஐ தற்போதுதான் தாக்கல் செய்கிறேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.32-ஐ நான் 2019-ம்

ஆண்டிலேயே வாங்கிவிட்டேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.33-ஐ 13.12.2019 தேதியன்றே வட்டாட்சியரிடம் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால், ஆமாம். வா.சா.ஆ.31, 32-ஐ நான் பெற்ற தேதியில் இந்த வழக்கு நிலுவையில் இருந்தது என்றால், ஆமாம். 30.01.2012 தேதியன்று எனக்கும், எனது இளவர் மகள்களுக்கு பாதுகாவலர் என்ற முறையிலும் கார்த்திகேயன் என்பவருக்கு பத்திர எண் 436/2012 என்ற ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்தேனா என்றால், ஆமாம், தாவா புல எண்ணிற்கும், அந்த சொத்தின் புல எண்ணுக்கும் சம்பந்தமில்லை. பத்திர எண் 4602/2012-ல் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தைதான் கார்த்திகேயனுக்கு எழுதிக் கொடுத்தேன் என்றால், ஆமாம், அந்த பத்திரத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. அந்த தான செட்டில்மெண்ட் சொத்தை இவ்வழக்கில் சேர்க்காததற்கு காரணம் எதுவும் இல்லை என்றால், ஆமாம். இரண்டாவதாக ஒரு சாட்சி போடுவதாகச் சொல்லி இவ்வழக்கில் வாய்தா வாங்கிவிட்டு 2வது சாட்சியை விசாரிக்க இயலாததால் கூடுதலாக ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 11.41 A.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.